நல்லூர் பிரதேச சபை
-------------------------------------
யாழ்ப்பாண மாவட்டம்
---------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 02 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 10 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய நல்லூர் பிரதேச சபையானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி நல்லூர் பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் செலவினம் மற்றும் வருமானம் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | செலவினம் | | வருமானம் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 02 | 67,445 | 01 | 1,057,888 |
| வகைப்படுத்தல் வழு | 01 | 61,900 | - | - |
| | - | | | |

1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

களஞ்சிய பொருள் இருப்பு கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1இ863இ234 ஆக இருந்ததுடன் உப பதிவேடுகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 1இ750இ271 ஆக இருந்தது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 128இ400இ526 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

-------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | |
| (i) அத்தியாயம் ஏ பிரிவு 132 | பிரதேசசபை ஒன்று களியாட்ட விடயங்களுக்காக ஆண்டொன்றிற்கு ரூபா 1,000 இற்கு அதிகமான செலவினத்தை மேற்கொள்ளும்போது அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பதற்கு முரணாக நடைமுறையாண்டில் ரூபா 41,956 உபசரணைச் செலவு அமைச்சரின் முன் அங்கீகாரம் இல்லாது மேற் கொள்ளப்பட்டது. |
| (ii) அத்தியாயம் ஏ பிரிவு 158(1) | ரூபா 5இ696இ529 ஆதனவரி செலுத்தத் தவறியோருக்கு செயலாளரால் ஆணைச்சீட்டு கையெழுத்து இடப்படவில்லை. |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் ஐஐ பிரிவு 14 | மேலதிக செலவினத்திற்குத் தேவையான தொகையை வாக்குப் பணத்திலிருந்து பெறுவதற்கு உரிய காலத்தில் தீர்மானம் நிறைவேற்றப் படவில்லை. |

| | |
|---|---|
| (ii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 65 | ரூபா 21,950 வியாபார வரி நிலுவை தொடர்பாக கொடுப்பனவிற்கு அனுமதிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின்னர் அரசிறை எழுதுநர் தவறுனர் நிரல் தயாரித்து செயலாளரிடம் ஒப்படைக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 76 | ரூபா 1,438,174 வாடகைக் கொடுப்பனவு தாமதங்கள் பற்றி அரசிறை எழுதுநர் செயலாளருக்கு அல்லது தவிசாளருக்குத் தெரிவிக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகள் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணங்களில் மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (v) அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 3இ643இ940 முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

(இ) <u>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்</u>

| | |
|---|---|
| நிதி ஒழுங்கு விதி – 396 | ரூபா 15,800 பெறுமதியான மூன்று மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) தாபன விதிக்கோவை அத்தியாயம் ஓ பிரிவு 9.2 | வருமான மேற்பார்வையாளருக்கு விடுமுறைக் கொடுப்பனவு கணிப்பீடு கணிக்கப்பட தவறினால் ரூபா 4,962 மேலதிக கொடுப்பனவு ஏற்பட்டுள்ளது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 7இ990இ541 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 42இ174இ047 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 5இ985இ199 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 9இ845இ579 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 2,777 | 2,660 | 5,697 |
| குத்தகை வாடகைகள் | 21,913 | 24,515 | 1,438 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,273 | 1,853 | 22 |
| வேறு வருமானங்கள் | 61,787 | 52,736 | 69,185 |

### 2.3.2 வருமான பாதிப்பு

1999ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டபோதும் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட மின் விளக்குகள் பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபையின் நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,441,025 மீண்டுவரும் செலவினத்திற்கு மின்சார சபையினால் மீளளிப்பு கிடைக்காமையினால் சபைக்கு வருமான பாதிப்பு எற்பட்டுள்ளது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்

நீதவான் நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட வேண்டிய 2012 ம் ஆண்டிற்கான நீதிமன்றக் குற்றப்பணங்கள் ரூபா 771,217 பெறுவதற்கு சபையானது சிட்டையிட்டு அனுப்பாமையால் இன்றுவரை கிடைக்கப் பெறவில்லை.

2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

i. 2006, 2010 மற்றும் 2011 ம் ஆண்டுகளுக்கான காணிப் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்படவேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா. 60,077,269 பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ii. 2010 மற்றும் 2011 ம் ஆண்டுகளுக்கான வருமதியான முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 57,182,927 முன்னைய ஆண்டு திரண்ட நிதியுடன் சீராக்கம் செய்யப்படாது துகு.்.2012.்.09 ம் இலக்க நாட்குறிப்பு மூலம் மூலதன அபிவிருத்தி ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

iii. 2012 ம் ஆண்டுக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணப் பட்டியல் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

2.4.1 பயன்படுத்தப்படாத பௌதீகச் சொத்துக்கள்

2011 ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 30,430,200 பெறுமதியான மூன்று காணிகள் இன்று வரை பயன்படுத்தப்படாதிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு :

| காணியின் பெயர் | காணியின் பெறுமதி (ரூபா) |
| --- | --- |
| குருந்தன்புலம் காணி | 5,354,000 |
| கனத்தைக் கட்டையன் காணி | 18,252,200 |
| சல்லிக் கண்டாவத்தைக் காணி | 6,824,000 |
| | 30,430,200 |

2.4.2 வருடாந்த இருப்புக் கணிப்பீட்டுச் சபை அறிக்கை குறைபாடு

---

2012 ம் ஆண்டுக்கான இருப்புக் கணிப்பீட்டுச் சபை அறிக்கையின் பிரகாரம் சபையின் இருப்புப் பேரேட்டுடன் ஒப்பிடும் போது 66 எண்ணிக்கையான பொருட்கள் மிகையாகவும் 29 எண்ணிக்கையான பொருட்கள் பற்றாக்குறையாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கணிப்பீட்டு சபையினால் சுட்டிக்காட்டப்பட்ட 62 பழுதடைந்த பயன்படுத்த முடியாத பொருட்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2.5 சிக்கனமற்ற கொடுப்பனவு

---

தாபன விதிக்கோவை அத்தியாயம் ஏஐஐ பிரிவு 3.2 இன் பிரகாரம் நாளாந்த செயற்பாடுகள் சிறந்த முறையில் திட்டமிட்டு செயற்படுத்தப்படாமையினால் சபையின் நாளாந்த செயற்பாடுகளாகிய இறுதிக்கணக்கு மற்றும் பாதீடு தயாரித்தல் செயற்பாடுகளுக்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கு நடைமுயையாண்டில் ரூபா 38,510 மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பது சிக்கனமற்ற கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டுள்ளது.

2.6 நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவு

---

நடைமுறையாண்டில் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு மற்றும் வாசிப்பு மாத நிகழ்வு செலவினமாக ரூபா 613,620 சபை நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பது நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவுகளாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

2.7 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

2.7.1 செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

-----------------------------------------------------------------

சபையினால் நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட செயற்திட்டங்களில் ரூபா 10,958,000 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 15 மூலதன வேலை செயற்திட்டங்கள் செயற்படுத்துவதில் காலதாமதம் காணப்பட்டதால் அவ்வேலைத் திட்டங்களை எதிர்வரும் காலங்களில் செயற்படுத்தவென சில்லறைக் கடனாளிகளில் ரூபா 5,905,903 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.7.2 முற்றாகக் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

---------------------------------------------------

நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட வீதி வேலைகளுக்கான செயற்திட்டங்கள் ரூபா 1,550,000 முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன.

2.8 செயற்பாடுகளின் செயற் திறமையின்மை

----------------------------------------- -

i. 2011 – 2012 வரையான காலங்களில் சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ரூபா 5,321,724 பெறுமதியான 16 விடயங்களுக்கு செலுத்தப்பட வேண்டுமென கணக்கிடப்பட்டபோதும் அறிக்கையிடும் திகதி வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. 2009 – 2012 வரையான காலப்பகுதியில் பாதுகாப்பு வைப்பு மற்றும் சம்பளக் கொடுப்பனவுகள் ரூபா 296,302 பெறுமதியான நிதி உரிய நபர்களுக்குச் செலுத்தப்படாது வைப்புக் கணக்கில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. கணக்கீடு
iv. மனிதவள முகாமைத்துவம்
v. நன்கொடை
vi. நானாவித வைப்புக்கள்
vii. வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு
viii. களஞ்சியப் பொருட்கள்